## தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடம், பல் மருத்துவக் கல்லூரி – சுகாதார ஆய்வகம் – துணை சுகாதார நிலையங்கள் திறப்பு!

# 20,021 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

தாம்பரம், ஆக.10–

**செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.119.14 கோடி செலவிலான தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடம், தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை– புறநகர் பிரிவு, ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் மற்றும் 3 நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, 20,021 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) தாம்பரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 110 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தாம்பரம் - மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடம், 7 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை - புறநகர் பிரிவு மற்றும் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் மற்றும் 3 நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,021 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,021 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, அரவிந்த ரமேஷ், திருமதி வரலட்சுமி, எஸ்.எஸ். பாலாஜி, எம்.எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், நில நிர்வாக ஆணையர் பழனிசாமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி கே.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை தாம்பரம் – அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக் கட்டடம்

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 213 படுக்கைகள் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 1282 வெளிநோயாளிகள், 136 உள்நோயாளிகள், மாதத்திற்கு 187 பிரசவங்கள், 1880 பெரிய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021--2022-ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், தாம்பரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தாம்பரம் அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 10.01.2023 நாளிட்ட அரசாணையின்படி தாம்பரம் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும், அம்மருத்துவமனையை வலுப்படுத்தும் பொருட்டு 110 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள தாம்பரம் - அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய மருத்துவமனையில் 5.37 கோடி ரூபாய் மதிப்பிலான நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளவாடப்பொருட்களுடன் தரைத்தளத்தில் அவசர சிகிக்சை பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, ஊடுகதிர் பிரிவு, C.T ஸ்கேன் MRI ஸ்கேன் கருவிகள், முதல் தளத்தில் வெளிநோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கு, இரண்டாம் தளத்தில், மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நலப்பிரிவு, அறுவை சிகிச்சை முந்தைய மற்றும் பின் கவனிப்பு பிரிவு, மூன்றாம் தளத்தில் டையாலிசிஸ் பிரிவு, இரத்த வங்கி, உள்நோயாளிகள் பிரிவு, நான்காம் தளத்தில் உள்நோயாளிகள் பிரிவு, தீக்காய சிகிச்சைப் பிரிவு, ஆய்வகம், ஐந்தாம் தளத்தில் அறுவை அரங்கு, தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆறாம் தளத்தில் வெளிநோயாளிகள் பிரிவு ஆகிய பல்வேறு பிரிவுகளுடன் இம்மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை – புறநகர்ப் பிரிவு

2024--25-ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், சென்னையில் உள்ள தாம்பரம் அரசு மருத்துவமனையில் பல்நோக்கு சிறப்பு பல் மருத்துவப் பிரிவு உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தாம்பரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் 7.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை - புறநகர் பிரிவினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார். இது சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை (TNGDCH) நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் “புறநகர் பிரிவு” ஆக இருக்கும்.

இந்த தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை - புறநகர் பிரிவில் சிறப்பு அம்சமாக அனைத்து வசதிகளும் கொண்ட 14 Dental Chairs, ஒரு முழு வாய் கதிர் வீச்சு கருவி (Orthopantomogram Machine) மற்றும் மின்னணு பல் ஊடுகதிர் கருவி (RVG) அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையின் முதல் தளத்தில் Smart Board வசதியுடன் சிறப்பு பயிற்சி மையம், சிறப்பு சிகிச்சைக்கு தேவைப்படும் பல சிறப்பு சிகிச்சை கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதுடன், பல்வேறு சிறப்பு சிகிச்சைகளுக்காக தனித்தனி சிகிச்சை அறைகள், பயனாளிகள் காத்திருக்கும் அறைகளும் அமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவமனைக்கு ஆறு சிறப்பு பல் சிகிச்சை மருத்துவர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

### சிறப்பு சிகிச்சைகள்

இந்த பல் மருத்துவமனையில், அடிப்படை பல் சிகிச்சை சேவைகளுடன் கூடுதலாக, ஈறு நோய்கள் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை, செயற்கை பல் பொருத்தும் சிகிச்சை, வாய்முக தாடை அறுவை சிகிச்சை, பல் சீரமைப்பு சிகிச்சை, குழந்தைகளுக்கான சிறப்பு பல் பராமரிப்பு மற்றும் தடுப்பு சிகிச்சைகள், பல் பாதுகாப்பு மற்றும் வேர் சிகிச்சை போன்ற சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படும்.

### ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் மற்றும் 3 நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள்

தாம்பரத்தில் 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம்; தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட பம்மல் - திருநகரிலுள்ள மூவேந்தர் தெரு, பவணந்தியார் பூங்கா, CTO காலனி ஆகிய இடங்களில் தலா 30 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்

செங்கல்பட்டு மாவட்டத்தில் கழக அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 205.56 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் 41,858 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மாநகர் சூழ் பகுதி மற்றும் நகர்புற பகுதிகளில் சிறப்பு வரன்முறைத் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ் 1672.52 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பட்டாக்களை 20,021 பயனாளிகளுக்கு வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 21.2.2025 மற்றும் 26.4.2025 நாளிட்ட அரசாணையின்படி 9321 பட்டாக்கள், அனகாபுத்தூர் மற்றும் மதுராந்தகம் நகர நில வரித் திட்டத்தில் 5461 பட்டாக்கள், நில நிர்வாக ஆணையர் அவர்களின் 23.6.2025 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையின்படி இணையவழியில் 2764 பட்டாக்கள், நில நிர்வாக ஆணையர் அவர்களின் 20.9.2018-ஆம் நாளிட்ட கடிதத்தின்படி சர்கார்/நஞ்சை/புஞ்சை/மனை-ரயத்து மனையாக மாற்றம் செய்யப்பட்ட 353 பட்டாக்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் திருநங்கைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 2122 பட்டாக்கள், என மொத்தம் 20,021 பட்டாக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, அரவிந்த் ரமேஷ், திருமதி வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, எம்.எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில் குமார், நில நிர்வாக ஆணையர் பழனிசாமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி கே.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் (அம்ருட்) கீழ்

## தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

### மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 10-

புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் (அம்ருட்) கீழ் இன்று வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் இவற்றில் செயல்படும் ஆலைகள் எத்தனை!

ஒவ்வொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஆலை வாரியாக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? தமிழ்நாட்டில் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அரசு ஏதேனும் நிதியை விடுவித்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

அம்ருட்டின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.



வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் பதில் வருமாறு :- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STP) பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP) என்பது மாநில அரசுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) நகர்ப்புற மேம்பாட்டு அதிகாரிகளின் பொறுப்பாகும். திட்ட வட்டமான தலையீடுகள், ஆலோசனைகள் மூலம் மாநிலங்களின் முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு துணைபுரிகிறது. புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் (AMRUT) மற்றும் AMRUT 2.0 போன்ற பல்வேறு திட்டங்கள், மிஷன்கள் மூலம் மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது.

அம்ருட்டின் கீழ், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் (UTs) திட்டங்களைத் தேர்ந்தெடுக்கவும், மதிப்பிடவும், முன்னுரிமை அளிக்கவும் மற்றும் செயல் படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளன. திட்டப்பணிகள் முடிவடைந்த பிறகு அவற்றைப் பராமரிப்பதும் மாநில அரசுகள் ULBகளின் பொறுப்பாகும்.

AMRUT போர்ட்டலில் மாநில அறிக்கையின்படி, ரூ.5,670.8 கோடி மதிப்பிலான 18 கழிவுநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டங்கள் AMRUT இன் கீழ் தரையிறக்கப் பட்டுள்ளன. AMRUT இன் கீழ் நாள் ஒன்றுக்கு 289.97 மில்லியன் லிட்டர் (MLD) STP திறன் உருவாக்கப் பட்டுள்ளது மற்றும் 210.03 MLD STP திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தும் கட்டத்தில் உள்ளன. அம்ருத்தின் கீழ் பொது கழிவு சுத்திகரிப்பு ஆலைகளை அரசு எடுக்கவில்லை.

AMRUT இன் கீழ் நிதிகள் மாநிலம், யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன, வெளியிடப்படுகின்றன, திட்ட வாரியாக அல்ல. AMRUT இன் கீழ் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை துறையில் திட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட செலவின் திட்ட வாரியான விவரங்கள் இணைப்பில் உள்ளன என்று தெரிவித்துள்ளது.

---

## நீலகிரி மாவட்டத்திற்கு செல்ல சுற்றுலா பயணிகள் ஆர்வம்!

ஊட்டி, ஆக.10–

ஊட்டி அருகே உள்ள அவலாஞ்சி மற்றும் எமரால்டு அணையின் இயற்கை அழகு சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பசுமை நிறைந்த காடுகள், புல்வெளிகள், பெரிய மலைகள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் அணைகள் என இயற்கை அழகு சூழ்ந்து காணப்படுகிறது. இதனைக் காணவே ஏராளமான வெளி மாநில மற்றும் வெளியூர்களிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் நாள்தோறும் வருகின்றனர். இங்கு நிலவும் காலநிலை சில வெளிநாடுகளிலும் காணப்படுவதால், வெளிநாடுகளில் இருந்தும் இதனை கண்டு ரசிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். ஊட்டிக்கு வரும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வழக்கம்போல் பூங்காக்கள் மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்ட சுற்றுலாத்தலங்களை கண்டு ரசிக்க விரும்புவதில்லை. மாறாக இயற்கை சார்ந்த சுற்றுலாவையே விரும்புகின்றனர்.

இதனால் தற்போது நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான இயற்கை சார்ந்த பகுதிகளில் வனத்துறை சார்பில் சூழல் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சூழல் சுற்றுலா தலங்களுக்கு செல்வதை தற்போது சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்புகின்றனர். இந்நிலையில் ஊட்டி அருகே உள்ள அவலாஞ்சி பகுதியில் சூழல் சுற்றுலா ஏற்படுத்தப்பட்டுள்ளது.

---

### திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஆக.10-

திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க. செல்வராஜ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட நாயகன், திராவிடச் சூரியன், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 11.08.2025



திங்கட்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, நேதாஜி மைதானத்தில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் ரூ.949 கோடியே 53 இலட்சத்தில் 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கவும், ரூ.182 கோடியே 06 இலட்சத்தில், 35 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், ரூ.295 கோடியே 29 இலட்சத்தில் 19,785 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கவும் வருகை தர உள்ளார்.

அதுசமயம், இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA 2 (பாக முகவர்கள்), BLC பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (08.08.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் உரம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வி. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி. முருகேஷ் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.